Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 14 ஆம் நாள் துல்கஃதா 10 (26-4-61) புதன்கிழமை இதழ் 62

# தோட்டத் தொழிலாளர்

## வேலை நிறுத்தம்

## 'மொழிப்பிரச்சினைக்கு தீர்வுகாண வற்புறுத்தல்

கொழும்பு, செவ்வாய்

**''கண்டி, காலி, பதுளை, ஹட்டன், கம்பளை, மாத்தளை, ரத்தோட்டை, சப்ரகமுவா, நுவ ரே லியா, யெல்லா முதலிய பகுதிகளில், தோட்டங்களிலுள்ள தமிழ்த் தொழிலாளர் இன்று காலை வேலைநிறுத்தம் செய்தனர்.**

**மொழிவிஷயத்தில் ஒரு சமரசமுடிவு ஏற்படுத்த வேண்டுமென்பதை வற்புறுத்தவே, இலங்கை ஜனநாயக காங்கிரஸும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தொழிலாளரை வேலை நிறுத்தம் செய்யுமாறு கேட்டுள்ளதாகத் தெரிகிறது.**

வேலைநிறுத்தப் பகுதிகளில் நிலைமை அமைதியாகவும், ஒழுங்காகவும் உள்ளது. கனம் பிரதம மந்திரி, அவசரகாலச் சட்டத்தை, தோட்டப் பகுதிகளிலெல்லாம் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்.''

என்று இன்றிரவு பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீக்லிஸ்டயஸ் பண்டாரநாயக்கா, தகவல்இலாகா மூலம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

---

### வங்கிகளும் அவசிய சேவையாக பிரகடனம்

#### ஆனால் குமாஸ்தாக்கள் வேலைக்குத் திரும்பவில்லை

கொழும்பு, ஏப்ரல்25

வங்கிகளையும், வர்த்தக ஸ்தாபனங்களையும் அத்தியாவசிய சேவைகளென்று அத்தியாவசிய சேவைகள் உத்தரவுப்படி நேற்று இரவு பிரகடனம் செய்தனர். ஆனால் வேலைநிறுத்தம் செய்யும் வங்கிக் குமாஸ்த்தாக்கள் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை.

### வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் சட்டவிரோதம்

கொழும்பு, செவ்வாய்

வர்த்தக அல்லது நிதி வேலையில் ஈடுபட்டுள்ள மத்திய வங்கி, இலங்கை வங்கி, மற்றும் வங்கிகள் அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் அத்தியாவசிய சேவைகளெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. விசேஷ கஸட் மூலம் இது அறிவிக்கப்பட்டது.

இப்பிரகடனத்தின்படிவங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் சட்டவிரோதமாகும்.

### ரா. பி. சேதுப்பிள்ளை காலமானர்

சென்னை, ஏப்ரல் 25

"சொல்லின் செல்வர்" எனச் சிறப்புப் பெற்ற டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை இன்று சென்னையில் காலமானர். அவருக்கு வயது 65. பல்லாண்டுகளாகத் தமிழ் வளர்ச்சியில் இரண்டறக் கலந்திருந்த சேதுப்பிள்ளை அவர்கள், 50 நூல்களை எழுதிப் புகழ் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், அதன்பின் இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்திலும் அவர் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றினர்.

---

## துப்பாக்கி வீரர் முனசிங்க

### சுடப்பட்டு மாண்டார்

### நெல்லியடி ராணுவமுகாமில் நடந்த சம்பவம்

கொழும்பு, செவ்வாய்

சென்ற 24-ம் திகதி திங்கட்கிழமையன்று மாலை நெல்லியடி இராணுவ முகாமில் ஒரு துரதிருஷ்ட சம்பவம் நடைபெற்றது.

துப்பாக்கி வீரர் டி. ஏ. முனசிங்க, வெளியே ரோந்து சுற்றிவிட்டு மற்றச் சிப்பாய்களுடன் முகாமுக்குத் திரும்பியதும், துப்பாக்கிகளை மற்றச் சிப்பாய்கள் எடுத்து வைக்கையில், தற்செயலாகச் சுடப்பட்டு மாண்டார். பொலிசார் இதுபற்றி விசாரித்து வருகிறார்கள் என்று தகவல் இலாகா மூலம், அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

### இராணுவத்துக்கு கவர்னர் ஜெனரல் உத்தரவு

**கொழும்பு, செவ்வாய்**

**இலங்கையின் பல ராணுவப் படைகளையும் தயாராகும்படி கவர்னர் ஜெனரல் உத்தரவு பிறப்பித்திருப்பதாய் இலங்கை இராணுவ வாலண்டியர் படைத் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.**

---

## ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் அத்தியாவசிய சேவை

கொழும்பு, செவ்வாய்

இறக்குமதி ஏற்றுமதி விற்பனை, விநியோகம் சம்பந்தப்பட்ட வங்கிகளும், ஸ்தாபனங்களும், தேயிலை, ரப்பர், தெங்கு நடுதல், தாயாரித்தல், உற்பத்தி செய்தல் ஆகியவைகளும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள எந்த வர்த்தகத்திலோ, கைத் தொழிலிலோ சம்பந்தப்பட்டவர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமாகுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் செய்பவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வேலை நிறுத்தத்தைத் தூண்டுபவர்களைத் தடுப்புக் காவலில் வைக்கவும், கட்டளை பிறப்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### ராஜீயத் தொடர்பு துண்டிப்பு

லண்டன், செவ்வாய்

கியூபாவுடனுள்ள ராஜீய உறவுகளை கொண்டுரா அரசாங்கம் துண்டித்துக்கொண்டது. கியூபாவிலுள்ள தனது தூதரை கொண்டுரா அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொண்டது.

### அதிக உணவு பயிரிட ஒத்துழைக்கவும்

#### பாடசாலைகளுக்கு மந்திரி வேண்டுகோள்

கொழும்பு

பாடசாலை வளவுக்குள்உள்ள நிலங்களை, அத்தியாவசிய உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு உபயோகிக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கு கல்வி ஒலிபரப்பு மந்திரி அல்ஹாஜ்பதியுதீன் மாமூத் விடுத்துள்ள ஒரு சுற்று நிருபத்தில் கேட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அதிக உணவு பயிரிடும், இயக்கத்தில் ஒத்துழைக்குமாறு அந்த சுற்று நிருபத்தில் பாடசாலை அதிபர்களை கல்விமந்திரி கேட்டுள்ளார்.

சிறிது முயற்சி செய்தால் வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் உணவுப்பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதுடன், வெளிநாட்டுக்கு செல்லும் பணத்தையும் சேமிக்கலாமென்று கல்விமந்திரிதமது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு முதலிய உணவுப்பயிர்களைப் பயிரிடலாமென அவர் தெரிவித்துள்ளார்.

---

அல்ஜீரியா

## ஜெர்மனியிலுள்ள பிரெஞ்சு துருப்புகளுக்கு அழைப்பு

### ஜெனரல் டிகாலின் உஷா நடவடிக்கை

பாரிஸ், செவ்வாய்

**கலக ராணுவத்தின் அபாயத்தைச் சமாளிக்க பிரான்ஸ் இன்று பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது. ஜெர்மனியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரெஞ்சு துருப்புக்களும், கவச அணிகளும் திருப்பி அழைக்கப்பட்டன.**

அல்ஜீரிய நெருக்கடியைச் சமாளிக்கப்பல புதிய நடவடிக்கைகளையும் பிரான்ஸ் மேற்கொண்டது. ரிசர்வ் படைகளை சேவைக்கழைக்கும் அதிகாரத்தின் கீழ் 10,000 துருப்புகள் சேவைக்கழைக்கப்பட்டன. காலாட்படை போர் அடிப்படையில் வைக்கப்பட்டது. கலகம் செய்த 4 ஜெனரல்கள், 4 அதிகாரிகள் ஆகியோரின் அந்தஸ்தை ரத்துச்செய்யும் பிரகடனத்தில் ஜனாதிபதி டிகால் இன்று கையெழுத்திட்டார்.

மந்திரி சபையையும் அவர் கூட்டி ஆலோசித்தார். இதற்கிடையில் அல்ஜீரியாவில் புதிய ஆட்சிக்கெதிராய் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அங்கிருந்து 17 ராணுவ விமானங்கள் தென் பிரான்

(4-ம் பக்கம் பார்க்க)

### தபால் அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

தபால் அறிக்கை ஒன்று கூறுவதாவது:-

வெஸாக் தினக் கார்டுகள் மூடப்பட்ட அல்லது திறந்த கவரில் அனுப்புவதானல் ஒரு அவுன்சுக்கு 10 சதம் தபால் முத்திரை ஒட்டவேண்டும். அதற்கு மேற்பட்ட ஒவ்வொருஇரண்டு அவுன்சுக்கும் 4சதம்வீதம் அதிகமாக ஒட்டவேண்டும்.

ஏப்ரல் 30 ம் தேதியும், மே 1 ம் தேதியும் தபால் விடுமுறையாகும். எனவே தங்கள் வெஸாக் கார்டுகளை ஏப்ரல் 26-ம் தேதிக்குள் அனுப்பிவிடுவது நல்லதென்றும், ஏப்ரல் 30, மே 1 ஆகிய தினங்களில் தபால் பட்டுவாடா இருக்காது. என்றும் அறிவிக்கப்பட்டது,

### மேதினம்: வங்கி விடுமுறை

கொழும்பு, செவ்வாய்

மேமாதம் முதல்திகதி (திங்கட்கிழமை) வங்கி விடுமுறையாக கைத்தொழில்கலாச்சார அமைச்சு பிரகடனம் செய்துள்ளது.

மணிவாக்கு

"உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் நீ வெற்றி காணுவாய்"
—ஷெல்லி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
சித்திரை மீ 14 உ (26-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## சிறு கைத்தொழில்கள்

யாழ்ப்பாணத்திலே சமீபத்தில் மிக உற்சாகத்துடனே ஓர் அன்பர் சிறிய கைத்தொழில் ஒன்றை ஆரம்பித்தார். ஆனால் அது வெற்றிபெற முடியாமல் மூடவேண்டிய ஒரு நிலையில் இருப்பதாக மிக வருத்தத்துடன தெரிவிக்கின்றார். வெற்றிபெறுததற்குக் காரணம், தொழிலாளரது ஒத்துழைப்பு இல்லாததும், நாணயக் குறைவும், பொதுமக்களின் ஆதரவின்மையுமென்றார். இது பெரிதும் வருந்தக்கூடிய நிலைமையாகும்.

இக்காலத்தில் ஒரு கைத்தொழிலை ஆரம்பிக்கவேண்டுமானல், அதிக துணிச்சலும், திறமையும் வேண்டும். கையிலுள்ள பணத்தைக்கொண்டோ கடன் வாங்கியோ, தொழில் நுட்பமறிந்தவர் ஒரு சிறு கைத்தொழிலை ஆரம்பிக்க முன்வருவது மிகவும் அரிது. துணிந்து முன்வந்து ஆரம்பித்தவர்களும், இவ்விதம் மனமுடைய வேண்டிய நிலையில் இருப்பின், பிறர் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க முன்வராமல் போவதுடன், நாட்டு வளர்ச்சியும் பெரிதும் தடைபடுவதாகும்.

ஜனத்தொகை ஒருபக்கம் பெருகிவருகையில், மற்ளெரு புறம் வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்துவருகிறது. படித்துப் பட்டம் பெற்றவர்களில் பலர் வேலையில்லாமல் சங்கடப்படுகிறார்கள். சிறு கைத்தொழில்களை கிராமப்புறங்களிலும் பரவலாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் இன்றேல் வேலையில்லாக் கஷ்டம் தீர முடியாதென்றும், இந்திய உள்நாட்டு அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி, புதுடில்லியில் கைத்தொழில் உற்பத்தியாளர் கூட்டத்தில் வற்புறுத்தினர். ஒவ்வொரு ராஜ்யத்திலும், ஓரளவு சுய உரிமையுள்ள கார்ப்பரேஷன்கள் அமைத்து, "கைத்தொழில் எஸ்டேட்"டுகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று உற்பத்தியாளர் சங்கத்தலைவர் புராணிக் யோசனை கூறினர்.

சென்னை முதலிய இடங்களில் "கைத்தொழில் எஸ்டேட்"டுகள் அமைக்கப்பட்டு சிறு கைத்தொழில்கள் முன்னேறி, பலருக்கு வேலை கிடைப்பதாகவுள்ளது. அதேபோல் யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் அவ்விதகைத்தொழில் கூட்டு முயற்சிகளுக்கு வசதி செய்யவேண்டும். கூட்டு முயற்சியில், பல நன்மைகளுண்டு. இதை விளக்கத் தேவையில்லை. தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியில் தங்களுக்கு அக்கறை உண்டென்பதைக் காட்ட, வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்கம் இத்தகைய கைத்தொழில் "எஸ்டேட்"டுகளை ஆரம்பித்து சிறு கைத்தொழில்கள் பெருகவும், வேலையில்லாக்கஷ்டம் குறையவும், நாட்டின் செல்வம் வெளியேருமல் தடுக்கவும் உதவவேண்டும். பல சிறிய கைத்தொழில்களுக்கு இங்கு இடமுண்டு.

இதே சமயம் இக்கைத்தொழில் நிர்வாகத்தில் தொழிலாளருக்கும் பங்கு இருக்கும்படி செய்வதால், முதலாளி-தொழிலாளி சச்சரவுகள் தலைதூக்காமல் கைத்தொழில் ஸ்தாபன வேலைகள் சீராக நடைபெறக்கூடும். கூர்ஜர முதல் மந்திரி டாக்டர் ஜீவராஜ் மேத்தா ஆமதாபாத்தில் பேசுகையில், நிர்வாகத்தில் தொழிலாளரும் பங்குபற்ற வேண்டியது, "காலத்தின் அவசிய தேவையாகி" விட்டதாயும் இப்பொறுப்பைச்சரிவரவகிக்க தொழிலாளர் தகுந்த கல்வி கற்கவேண்டுமென்றும் கூறியுள்ள யோசனையும் குறிப்பிடத் தக்கது.

பொதுமக்களுக்கும் இவ்விஷயத்தில் முக்கியமான கடமை உண்டு. தங்கள் பகுதியிலே சிறு கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களையே ஆதரிப்பதென்று அவர்கள் விரதம்பூண்டு, இத்தொழில்களை,ஓரளவு தியாகத்துக்கும் தயாராக இருந்து ஆதரிக்க வேண்டும். அப்போதுதான் கைத்தொழில்கள் பெருகி, வேலையில்லாக் கஷ்டம் குறைந்து, நாடும் சுபீட்சமடைய முடியும்.

# ஆசிரியர்களும் அரசியல் உரிமைகளும்

## கல்விமந்திரிக்கு ஆசிரியர் சங்கம் கடிதம்

கொழும்பு, செவ்வாய்

ஆசிரியர்கள் நிலைபற்றியும் அவர்களின் அரசியல் உரிமைகள்பற்றியும் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. சங்கக் காரியதரிசி கையொப்பமிட்டு அனுப்பியுள்ள அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகள் உதவிபெறும் பாடசாலைகளாகத் தொடர்ந்திருந்துவருவதால் அப்பாடசாலை ஆசிரியர்கள் தங்களது பூரண அரசியல் உரிமைகளை அனுபவித்துவருகிறார்களென்று எமது சங்கம் உறுதியாக நம்புகிறது. துரதிர்ஷ்டவசமாக இந்தப்பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை உபயோகிப்பதற்காக இலாகாவைச்சேர்ந்த சில அதிகாரிகளால்தண்டனைக்குள்ளாகிறார்கள். இது சம்பந்தமாக ஆசிரியர்களைத் தொந்தரவுசெய்ய வேண்டாமென்று அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிடுவீர்களென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதை எமது சங்கம் உறுதியாக எதிர்க்கிறது. அரசாங்கத்திடம் இப்பாடசாலைகளை ஒப்படைப்பது உதவிபெறும் பாடசாலைகளின் அந்தஸ்தை அரசினர்பாடசாலைகளின் அந்தஸ்துக்கு மாற்றிவிடும். இதன் மூலம் இப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் தங்களது அரசியல் உரிமைகளையும் தொழில் உரிமைகளையும் இழக்க வேண்டி நேரிடும். எந்த ஆசிரியரும் அரசினர் ஆசிரியராக இருப்பது பலமற்றதென்று நாங்கள் கருதுகிறோம். எனவே இப்பாடசாலைகள் மாகாண அல்லது மாவட்ட அடிப்படையில் சட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சபைகளினல் நிர்வகிக்கப்படவேண்டுமென்று கோருகிறோம்.

உதவிபெறும் பாடசாலையாகவிருந்து, உதவிபெறும் பாடசாலைகள் பயிற்சிக்கலாசாலைகள் (விசேஷ ஷரத்துக்கள்) சட்டத்தின்படி வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலையாகவோ உதவிநன்கொடைபெருத பாடசாலையாகவோ மாறிய பாடசாலையைச் சேர்ந்த எந்த ஆசிரியருக்கும் சேவையிலிருந்து ஓய்வுபெறும் உரிமை வழங்கப்படவேண்டுமென்று எமது சங்கம் கோரியுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை காரணமாக வேலை நிபந்தனை மாற்றமடைந்துள்ளதென்ற அடிப்படையில்தான் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே இன்று வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலையிலோ உதவிநன்கொடைபெருத பாடசாலையிலோ பணியாற்றும் ஆசிரியர்கள் நஷ்டஈட்டுடன் ஓய்வுபெறும் உரிமை வழங்கப்படவேண்டும். ஆசிரியர்களுக்கு ஓய்வுபெறும்உரிமை வழங்கப்படுமென்று நீங்கள் எங்களுக்கு வாக்குறுதியளித்ததை நாங்கள் நினைவுறுத்த விரும்புகிறோம்.

வேலையிலிருந்து நிறுத்தி வைக்க சட்டப்பிரமாணங்களில் விதி எதுவும் இல்லையாயினும் வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சில ஆசிரியர்கள் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவது வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழுள்ள பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் அனுபவிக்கும்மிகப்பெரிய கஷ்டமாகும். சட்டவிரோதமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்படும் ஆசிரியர்களுக்கு அச்சமயத்தில் சம்பளமும் கொடுக்க மறுக்கப்படுகிறது. வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு அக்காலத்தில் அவர்களுடைய சம்பளத்தில் பாதித்தொகை கொடுக்கப்படுவதுடன் அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தியதும் பாக்கிப்பணமும் கொடுக்கப்படுகிறதென்பது கவனிக்கத்தக்கது. 1960-ம் ஆண்டு டிசம்பர்மாதம் முதல் திகதியிலிருந்து வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட சில ஆசிரியர்களுக்கு சென்ற ஐந்துமாதகாலமாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்களுள் சிலர்மீது கமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வினைவையாகவுள்ளன. சுதந்திரமான விசாரணைச்சபையொன்று அவசியமென்று நாங்கள் கருதுகிறோம்.

# "சமதர்மமின்றேல் பொருளாதார பலமில்லை"

## இந்துமகாசபைத் தலைவர் பேச்சு

"சமதர்ம கொள்கையின் மீதே வர்ணசிரம முறையும் கிராம அமைப்பும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நமது கிராம முறையின்படி, 'ஒவ்வொருவருக்கும் அவரவரது தேவைக்கு வேண்டிய யாவும் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவரது திறமைக்குத் தகுந்ததைக் கொள்ளவேண்டும்.' இந்து முறையில் நிலப்பிரபுத்தவம் கிடையாது. நிலப்பிரபுத்துவமும், ஜாகிர்தாரிமுறையும், இந்தியாவிலே முஸ்லிம் மன்னர்களால் புகுத்தப்பட்டது."

என்றிவ்வாறு குவாலியரில் நடைபெற்ற அகில பாரத ஹிந்து மகாசபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. வி. ஜி. தேசபாண்டே கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

மகாராஷ்டிர மகாவீரரான சிவாஜி 17 வது நூற்றாண்டில் முதலில் எடுத்த நடவடிக்கை நிலப்பிரபுத்துவத்துக்கும் ஜாகிர்தார்களுக்கும் எதிராகப் போர்தொடுத்ததுதான். அவர் புரட்சிகரமான நிலச்சீர்திருத்தத்தைப் புகுத்தினர். இந்தியாவில் இந்து சமதர்மத்தைப் புகுத்தியவர் அவரே.

சமதர்மத்தை ஏற்படுத்தாவிடில் இந்தியாவுக்கு பொருளாதாரபலம் இராது. பொருளாதார பலமே தேசத்தின் இராணுவ பலமுமாகும்.

தனிப்பட்டவரின் ஆன்மீக விமோசனத்துக்கு முன் அவருக்கு பொருளாதார நீதி வழங்கவேண்டும். உண்மையான மத தர்மத்தைப் பின்பற்றுவதால் பொருளாதார சுபீட்சம் ஏற்படமுடியும். ஒவ்வொருவரும் தங்கள் விமோசனத்துக்கு முயலுமுன் அவர்களுக்குப் பொருளாதார நீதி வழங்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

பொருளாதார நீதிவழங்குவதும் செல்வத்தைச்சீராகப் பங்கிடுவதும் இல்லாவிடில் ஆன்மீக விருத்திக்கான சூழ்நிலை இராது. இக்கொள்கை எமது பழைய சாஸ்திரங்களில் வற்புறுத்தப்படுகிறது. நவீன காலத்துக்கு ஏற்ப பழைய தர்மங்களை தக்கபடி பின்பற்ற வேண்டும்.

## எதிர்த்தவர்கள் புகழ்கிறார்கள்!

### மந்திரி இலங்கரத்ன பெருமிதம்

கண்டி, ஏப். 25

"எண்ணை மூலம் மக்களைத் தம் எண்ணப்படி சுரண்டிய ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிராக நான் எண்ணை மசோதாவைக் கொண்டுவந்த கஷ்டத்தைப் பார்க்கையில் ஏழை விவசாயிகளை முதலாளிகள் சுரண்டுவதைத் தடுப்பது எவ்வளவோ இலேசாக்கப்படுகிறது." இவ்வாறு உணவு, வர்த்தக,கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன போலேப்பிலுள்ள இலங்கை உற்பத்திப் பொருள்கள் கடையையும் காய்கறிகள் சேர்க்கும் நிலையத்தையும் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"எண்ணை மசோதாகொண்டு வருமுன்னர் எதிர்த்தவர்கள் இப்பொழுது அதைப்புகழ ஆரம்பித்திருக்கின்றார்கள். இதற்கெல்லாம் மேலாக யு. என். பி. யைச் சேர்ந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்தன என்னை மிகவும் புகழ்ந்து எனக்குப் புத்தருடைய அருள் கிடைக்க வேண்டுமென்றும் நிர்வாண நிலையைநான் அடைய வேண்டுமென்றும் வாழ்த்தியிருக்கிறார்" என்று மந்திரி இலங்கரத்ன கூறினர்.

## நூற்றுக்கு 5 பேர்!

கொழும்பிலுள்ள இரு பௌத்த சர்வகலாசாலைகளான வித்தியோதய, வித்தியலங்காரா இவற்றில் படிக்கும் புத்த பிக்குகளில் நூற்றுக்கு 5பேர்தான் பரீட்சையில் தேறுகிறார்கள். மற்ற மாணவர்களில்நூற்றுக்கு 75 பேர் தேறுகிறார்கள்.

'இவ்விரு சர்வ கலாசாலைகளிலும் இரண்டே பிக்குகள் மட்டும் இருக்கும் நாளும் வரலாம். அவர்கள் இரு சர்வ கலாசாலை துணை வேந்தர்களாக இருப்பர்." என்று பிரவீரை பிரதம இன்பெக்டர் அகுரடிய அமரவம்சதேரோ, கம்பளையில் புவனேகபாகு பிரவீரை வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## ஜயாறன் எழுதுவது

சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் காலமானதாக, இந்திய வானெலி நேற்று அறிவித்ததைக் கேட்டதும் என்னைப் போல் பலர் திடுக்கிட்டிருப்பர்.

பத்து நாட்களுக்கு முன்புதான், பிள்ளை அவர்களை கௌரவிக்க சென்னை செனேட் மண்டபத்தில் பெரிய பாராட்டுக் கூட்டம் நடந்தது. அவரது உருவப்படத்தையும் அங்கு திறந்து வைத்தனர். டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் தலைமையில் நடந்த அவ்விழாவில் ஈழநாட்டிலிருந்து டாக்டர் தனிநாயக அடிகளும் சென்று பிள்ளை அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

அதே கூட்டத்தில் "ஆற்றங்கரையினிலே" என்ற அவரது புதிய நூலும் வெளியிடப்பெற்றது. தமிழிலே ஐம்பது நூல்களுக்குமேல் எழுதி வெளியிட்டு தமிழ்ச் செல்வத்தைப் பெருக்கி தமிழன்னைக்கு மேலான தொண்டுசெய்த தவப்புதல்வர் மறைந்தது, தமிழ் பேசும் நல்லுலகைத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பெரிய இழப்பாகும்.

* * *

சேது என்பது தமிழ் நாட்டையும் ஈழநாட்டையும் இணைக்க ராமர்பிரான் போட்ட பாலமாகும். அந்த அருட்பெயர் தாங்கிய பிள்ளையவர்கள், தம் பெயருக்கேற்ப தமது தமிழ் இலக்கியப் பணி மூலம் இரு நாடுகளுக்கும் அழியாத பாலம் போட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடந்ததல்லவா? அந்த விழாவிலே தலைமை வகித்து, அவர் நகைச்சுவையுடன் பேசியவை இன்றும் பலர் உள்ளத்தில் அப்படியே உள்ளன.

தலைமை வகிக்க அவர் வருவதற்கு சற்றே தாமதமாயிற்று. அதற்குள் தனிநாயக அடிகளார் பேச ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரத்துக்குப் பின் வந்த பிள்ளையவர்கள் மேடைக்கு வந்து "தனிநாயகத்துக்கு ஒரு சபாநாயகம் தேவையா?" என்று கூறவே மகாநாட்டில் ஒரே சிரிப்பு.

பிள்ளையவர்களிடம் பயின்ற மாணவர்கள் பலர், இன்று ஈழத்திலே பெரிய பதவிகள் வகித்து மேலான தமிழ்ப் பணியாற்றுகின்றார்கள்.

தெளிந்த அறிவும், விரிந்த உள்ளமும், தெய்வ பக்தியும், எளிமையும் வாய்ந்த இந்தத் தமிழ்ப் பெரியார் எழுதி வைத்துள்ள நூல்களே, அவருக்கு மேலான ஞாபகச் சின்னங்களாகப் பொலியும்.

* * *

இராணுவதலைமைப்பீடத்தை விசேஷம் ஏதும் உண்டா? என்று விசாரித்தேன். 'ஒன்றுமில்லை; எல்லாம் அமைதியாக இருக்கிறது' என்றனர். விசேஷம் ஒன்றுமில்லாவிட்டால் க்ஷேமந்தானே!

ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்து ஒருவாரமாகிறது. இது இன்னும் எவ்வளவுகாலம் நீடிக்கும்? என்றுகேட்கிறார் ஓர் அன்பர். யாருக்குத் தெரியும்?

இங்கு எல்லாம் அமைதியாகவே உள்ளது. ஊரடங்குச் சட்டத்துக்கு அவசியமே இல்லை. நிதிமந்திரி வெசாக்குக்கு முன்பாக இங்கு வந்து பார்த்தால், ஊரடங்குச் சட்டத்தை அவரே நிறுத்திவிடலாம். யாழ்ப்பாணம், நாகதுவீபத்தில் புத்தஜயந்தியும் வழக்கம்போல் தடையில்லாமல் நடைபெறலாம். ஆனால் சித்தம் எப்படியோ!

* * *

நேற்றுக் காலையில் எனக்கு டெலிபோனில் பல "மண்டகப்

(4-ம் பக்கம் பாக்க)

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்ப்பாணம் "டில்கா ஐஸ் கிறீம் கம்பெனி" யில் உணவு பரிமாறும் 'வெயிட்டர்கள்' தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர்,
டில்கா ஐஸ் கிறீம் கம்பெனி,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## புதுமனைப் பிரவேச அழைப்பிதழ்

அன்புடையீர்,

இடம்: திருவருள் அகம். குரு வீதி, காங்கேசன்துறை.

காலம்: 28-4-61 இரவு 7-22—9-25.

உபசரிப்பு: நான்கு நாட்கள்.

தங்கள் நல்வரவை நாடும் அப்பாப்பிள்ளை இராசநாயகம். (ஆசிரியர் அ. மி. பாடசாலை, வருத்தலைவிளான்) திருமதி நாகம்மா இராசநாயகம் (ஆசிரியை, நடேஸ்வரக் கல்லூரி K. K. S.

Advt 122


## நன்மரண இதழ்

சில்லாலை
செபஸ்தியாம்பிள்ளை
மரியாம்பிள்ளை
அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல்(26-ந் திகதி புதன் கிழமை) இன்று பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அரிய பத்தாவை இழந்து துயருறும்: ம. மார்சலீனு

நேச தந்தையை இழந்து துயருறும் மக்கள்: வண. சுவாமி ம. பாவிலுப்பிள்ளை, ம. பிரான்சீஸ் ஆசிரியர், ம. அன்னம்மா ஆசிரியை, ம. செபஸ்தியாம்பிள்ளை, ம. ஆரோக்கியநாதர் பொலிஸ் சார்ஜண்ட், ம. யோசவ், ம. இன்னுசித்தம்பி. ப. மரியம்மா, அ. செசிலியம்மா.

நல்லாயன் வீதி,
சில்லாலை.

# நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்போர்மீது நடவடிக்கை

## இந்தியா தயாரித்துள்ள சட்டம்

புதுடில்லி, செவ்வாய்

நாட்டின் ஐக்கியத்தைக் குலைத்து வேற்றுமையை வளர்க்கக்கூடிய நடவடிக்கைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக்கூடிய மசோதாவொன்றை லோகசபை இன்று நிறைவேற்றியது.

எழுத்து, பேச்சு முதலிய நடவடிக்கைகள்மூலம் நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும், குற்றவாளிகளாகக் காணப்பட்டால் 3 வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும், அபராதமும் அல்லது இரண்டும் விதிக்க இந்த மசோதா வசதி செய்கிறது.

இந்திய உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி இந்த மசோதாவைச் சமர்ப்பித்துப் பேசுகையில் நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது என்ருர். கம்யூனிஸ்டுகள் மக்களின் மன உறுதியைக் கெடுத்துவிட்டார்களென்று அவர் கூறினர். இச்சட்டம் நீதிமன்றம்மூலம் அமுல்செய்யப்படுமாதலால் தடுப்புக் காவல் என்ற பேச்சுக்கு இடமில்லையென்று திரு. சாஸ்திரி கூறினர்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கட்சி ஆகியனவும் மசோதாவை ஆதரித்தன. திரு என். பி. காட்கில் என்ற சுயேச்சை எம். பி. பேசுகையில் இந்த மசோதாவை கம்யூனிஸ்டுகள் எதிர்த்துப்பேசுவதிலிருந்தே அவர்கள் நோக்கம் தெரிகிறதென்ருர்.

மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபொழுது ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

## கோழி வளர்ப்பில் ஈடுபட மந்திரி யோசனை

பண்டாரவளை, ஏப். 25

"அதிக முட்டைகள் பெறுவதற்கு கோழி வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டவேண்டுமென்று காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா இங்கு நடைபெற்ற கோழி வளர்ப்பு கண்காட்சியில் கூறினர். கோழிவளர்ப்பு பொருளாதாரத்தை உயர்த்துவதோடு வெளியூரிலிருந்து இங்கு முட்டைகள் இறக்குமதி செய்வதையும் தடுக்கும். முட்டை இறக்குமதி செய்ததால் சென்ற வருடம்மட்டும் நாற்பது லட்சம் ரூபா செலவாகியது" என்று கூறிய மந்திரி, கோழி வளர்ப்பவர்கள் கோழித்தீன் அதிக விலை விற்கப்படுவதாகத் தம்மிடம் புகார் செய்திருப்பதாகத் தெரிவித்து, தான் அதன் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர்.

## கூட்டு வழிபாடு சுகவாழ்வைத்தருகிறது

நாவலப்பிட்டி, ஏப். 25

டிக்கோயாவைச் சேர்ந்த அன்பீல்ட் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா கடந்த மூன்று தினங்களாகக் கோலாகலமாக நடைபெற்றது.

யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், இத்தோட்டத்தில் கூட்டு வழிபாடு தொடங்கிய காலம் முதல் சுபீட்சம், சுக வாழ்வு, ஐக்கியம் என்பன மேம்பட்டு இத்தோட்ட மக்கள் ஒற்றுமையாக முன்னேறி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர்கள் எக்காரணத்தைக் கொண்டும் முதலாளிகளை வெறுக்கக்கூடாது. அன்புடன் நடந்தால்தான் பல காரியங்களிலும் வெற்றி பெறலாம். கோவிலைக் கட்டிவிட்டால் போதாது. தினமும் பிரார்த்தனை வழிபாடு செய்து ஆத்மீக முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தவேண்டும் என்று கூறினர்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:- ஆண்டவனை கோவில் கட்டி இருத்திவிட்டால் போதாது. உங்கள் உள்ளத்திலும் குடியிருத்தவேண்டும். ஆண்டவனை எமது உள்ளத்தில் வரவேற்க முதலில் நம்மைத் தூய்மை செய்ய வேண்டும். இதற்கு ஆலய வழிபாடு, பிரார்த்தனை, நல்லோர் உறவு என்பன உதவியளிக்கின்றன. இதனால்தான் ஆண்டவனுக்குப் பெரிய திருக்கோயில் எடுக்கிறோம் என்று கூறினர்.

ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை, தோட்டத்துரை திரு. பிலிமத்தலாவை, தோட்டக் குமாஸ்தா ஸ்ரீ பத்மநாதன் ஆகியோரும் விழாவில் பேசினர்.

## சுருட்டுத் துண்டினல் ஒரு கிராமம் சாம்பல்!

ஹைதராபாத், ஏப். 24

அணைக்காமல் கீழே போடப்பட்ட சுருட்டுத் துண்டின் காரணமாக கண்டமாபிக என்ற கிராமமே சாம்பலானது!

அணைக்காமல் போடப்பட்ட இந்த சுருட்டுத் துண்டின் காரணமாக முதலில் ஒரு குடிசை எரிந்தது. இதைத் தொடர்ந்து 150 வீடுகள் தீயினல் எரிந்து சாம்பலானது. ஏழு கால்நடைகள், மற்றும் ஏராளமான உணவுத் தானியங்கள் நாசமாயின.

## பட உற்பத்தி ஸ்தம்பிதம்

கொழும்பு, திங்கள்

கச்சாபிலிம் கிடைக்காத காரணத்தால் தயாரிப்பிலுள்ள பல சிங்களப் படங்கள் முடிவடையாமல் ஸ்தம்பிதமடைந்துள்ளன,வென்றும் ஆறுக்குமேற்பட்ட சிங்களப்படங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் சினிமாப்படத்தயாரிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

# "ஆடு வெட்டும் கத்தியால் அம்மாவை வெட்டினர்"

## சித்தாண்டி கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதி மார்க்கண்டுவின் மனைவி செல்லம் என்பவரைக் கொலை செய்ததாகவும், மார்க்கண்டு சுப்பிரமணியத்தைக் கொலைசெய்ய எத்தனித்ததாகவும், சட்டவிரோதமாகக் கூட்டம்கூடியதாகவும் சித்தங்கேணியைச்சேர்ந்த என். ஐயாத்துரை, எஸ். மகேந்திரன், எம். அப்புத்துரை, எஸ். கந்தசாமி, எஸ் முருகேசு, ஆர். நாகமுத்து, ஏ. இளையதம்பி, எஸ். இராசையா, ஏ. சின்னத்துரை ஏ. செல்லத்துரை, ஆர். வீரகத்தி ஆகிய பதினெருபேர் மீது தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் என். சின்னத்தம்பி முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா வழக்கை நடத்தினர்.

திரு. ஏ, நித்தியானந்தாவின் அனுசரணையுடன் திரு. கே. வி எஸ், சண்முகநாதன் முதல் எதிரியின் சார்பில் தோற்றினர். 2, 3, 4, 6, 7, 9, 11-ம் எதிரிகளின் சார்பில் திரு. பிரின்ஸ் ராஜேந்திரா, திரு. நித்தியானந்தா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர். 8-ம் எதிரியின் சார்பில் திரு. பி. நாகலிங்கம், திரு, கே. சேனதிராசா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஸி. எஸ். பார்குமாரகுலசிங்கமும் திரு எஸ். நாகராஜாவும் தோற்றினர்கள். 10-ம் எதிரியின் சார்பில திரு. என். ரி. சிவஞானம், திரு, ஏ நித்தியானந்தா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர்.

மார்க்கண்டு சுப்பிரமணியம் சாட்சியம் அளிக்கையில் பின் வருமாறு கூறினர்.

காலஞ்சென்ற செல்லம் எனது தாயார். 1959-ம்ஆண்டு ஆகஸ்டு 28-ந் திகதி எனது வீட்டு விருந்தையில் உடைகள் சிலவற்றை நான் ஸ்திரிக்கை செய்துகொண்டிருந்தேன். சிலர் ஏசும் சத்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தபொழுது எதிரிகள் பதினெருபேரும்மற்றும்மூவரும் எங்கள் வளவு முன்புறத்தில் நிற்கக்கண்டேன். அவர்கள் மீது ஒரு சோடாப்போத்தலை எறிந்தேன். எதிரிகள் எல்லோரும் எனது வளவிலிருந்து ஓட்டம் பிடித்தனர். கதவைப் பூட்ட எனது மனைவிசென்ருள். அப்பொழுதுமுதலெதிரி அவளை வெட்டியதைப் பார்த்தேன். இதன்பின் காலஞ்சென்ற எனதுதாயார் ஓடிவந்து எதிரியிடம் மன்ருடினர். அச்சமயம் முதலாம், மூன்ரும், ஒன்பதாம், பத்தாம் எதிரிகள் எனது தாயாரை வாளால் வெட்டியதை நான் பார்த்தேன். எட்டாம் எதிரி ஆடுவெட்டும் கத்தியால் அம்மாவை வெட்டினர்.

எனது மனைவி என்னை அறைக்குள் இழுத்துச்சென்று கதவைப் பூட்டி விட்டாள். பொலிசார் வரும்வரை நானும் எனது மனைவியும் அறைக்குள்ளிருந்தோம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.


## தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.

## மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது




மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு




இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# செய்திச் சுருக்கம்

சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் 4 வது அணுக்குண்டு சோதனையை நடத்தியிருக்கிறது. அடுத்த அணு சோதனையை அது பூமிக்கடியில் நடத்துமாம்.

⁂ ⁂ ⁂

கியூபா அரசாங்கம் மேலும் 176 புரட்சிக்காரர்களைக் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

⁂ ⁂ ⁂

பிரிட்டனும், ரஷ்யாவும் போர்நிறுத்தம் செய்யும்படி விடுத்த வேண்டுகோளை லாவோஸ் வலதுசாரி அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாய் லண்டனில் அறிவிக்கப்பட்டது.

⁂ ⁂ ⁂

அங்கோலாவின் வடபகுதியில் 2 ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். போர்த்துக்கேய துருப்புக்கள் அங்கு ஈவு இரக்கமற்ற முறையில் பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாய் கூறப்படுகிறது.

⁂ ⁂ ⁂

எரிமலை ஒன்று தீ கக்கியதின் காரணமாய் மத்திய ஜாவாவிலிருந்து 10,000 பேர் வெளியேற்றப்பட்டனர்.

⁂ ⁂ ⁂

ஓரிஸாவில் சட்டமியற்றும் அதிகாரத்தை ராஷ்டிரபதிக்கு வழங்க லோகசபை அனுமதித்துள்ளது.

⁂ ⁂ ⁂

இந்தியாவின் ராம்கம்கா திட்டம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

---

## உபசரணைப்படி தேவையில்லை

கொழும்பு, செவ்வாய்

கவர்னர் ஜெனரலுக்கு தனியாக உபசரணைப்படி, அரசாங்கம் வழங்கக் கூடாது என்று சம்பளக் கமிஷன் தனது அறிக்கையின் இரண்டாவது பகுதியில் சிபார்சு செய்துள்ளது.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படிகள்" நடந்தன. யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டத்தைக் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை நான் போட்டுவிட்டதாகவும், இராணுவம்,மாலை6மணிமுதல் காலை 6 மணிவரை போட்டுள்ளதாகவும், தங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையென்றும் பலர் கேட்டுள்ளனர்.

கடைசிப் பதிப்பில் திருத்திவிட்டேன். என்றாலும் பதில் பேசாமல் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

## ஆடம்பரமற்ற திருவிழா

பண்டத்தரிப்பு, புதன்

'திருவிழாக்களை அமைதியான முறையில் பிரார்த்தனைகளுடன் நடாத்த சைவ மக்கள் முன்வர வேண்டும்' என்னும் தீர்மானம் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற பண்டத்தரிப்பு, இந்து இளைஞர் சங்கக் கூட்டத்தில் நிறைவேறியது.

சைவ இளைஞரிடையே மத அறிவையும் இறை வழிபாட்டையும் வளர்க்கும் பொருட்டு ஒரு சமய அறிவுப் போட்டியை நடாத்த வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

## விசாகவிழா ஏற்பாடுகள்

அநுராதபுரம், செவ்வாய்

விசாகதினக் கொண்டாட்டங்களுக்கான ஒழுங்குகள் அநுராதபுரத்தில் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. பெருந்தொகையானோர் அன்று 'சில்' அனுஷ்டிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## "பௌத்தர்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டும்"

### கலாசார மந்திரி பேச்சு

கண்டி, ஏப் 25

பௌத்தர்கள் சமயத் துறையில் ஆர்வம் காட்டித் தமது உரிமையைக் காப்பாற்றவேண்டியசமயம்வந்துவிட்டது.என்று கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா,கண்டி புத்தசங்கத்தின்பதினைந்தாவது பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

பௌத்தர்கள் சமயத்துறையில் சிறிதளவே ஈடுபடுவது தமக்கு மிக்க கவலையளிப்பதாக இருக்கிறது எனக் கூறிய மந்திரி, தாமே இவ்வித சங்கமொன்றை நடாத்தி வருவதால் தமக்கு அதை நன்கு உணர முடிவதாகக் கூறினர்.

பௌத்தர்கள் தமது சமயத்தைப் பொறுத்தவரை பூரண சுதந்திரம் அனுபவிப்பதால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் அவர்கள் சமய விவகாரங்களைவிட களியாட்டங்களில் அதிக அக்கறை காட்டுவது என்னை வருத்துகிறது. அரசாங்கம் பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஒரு பௌத்த கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது. என மந்திரி மேலும் தெரிவித்தார்.

## கழக நிதிக்காக குளம்வெட்டும் வாலிபர்

சுழிபுரம், ஏப். 25

சுழிபுரம் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாலிபர் தமது கழக நிதிக்காக பருளாய் வீதியிலுள்ள குளமொன்றைப் பதினைந்தடி அகலத்தில் பெருப்பித்து வெட்டுகின்றூர்கள்.

சுழிபுரம் கிராம முன்னேற்ற சங்கத்தினர் இவ்வேலையை இவர்களிடம் ஒப்படைத்துள்ளனர். கடந்த வாரம் தொடக்கம் இவ்வேலையைப் பொறுப்பேற்றுச் செய்துவருகின்றனர். இம்மாத முடிவுக்குள் இவ்வேலையைச் செய்து முடிப்பார்களெனக் கழகத்தினர் தெரிவித்தனர்.

---

## லொறி—பஸ் மோதல்

### மூவர் காயம்

கோப்பாய், செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த "பஸ்" வண்டியொன்றும், நீர்வேலி வாழைக்குலைச் சங்க லொறியொன்றும் மோதிக்கொண்டதில், லொறிச் சாரதியான சிறுப்பிட்டியைச் சேர்ந்த திரு. மூத்ததம்பி, பிரக்ஞையற்ற நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர், சாவகச்சேரி வீதியில் விரவாணி என்னுமிடத்தில் நடைபெற்ற இவ் விபத்தில், 'பஸ்' சாரதியைத் தவிர வேறு எவரும் 'பஸ்' வண்டியில் பிரயாணம் செய்யவில்லை எனத் தெரிகிறது.

பஸ்சாரதி பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

## அயூப்கான் இலங்கை வருவார்

கொழும்பு, செவ்வாய்

பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் அயூப்கானை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அழைத்துள்ளார்.

பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கும் மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு மூலமாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இலங்கைப் பிரதமரின் அழைப்பை பாகிஸ்தான் ஜனதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாயும் இவ்வருட இறுதியில் அவர் இலங்கைக்கு வரக்கூடுமென்றும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

## இராணுவ மோட்டார் மீது சுட்டனர்

### ஏருவூர் பக்கத்தில் சம்பவம்

கொழும்பு, செவ்வாய்

சென்ற 24ந் திகதி திங்கட்கிழமை இரவு கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்த இராணுவ மேட்டார்கள், ஏருவூருக்கும், செங்கலடிக்கும் இடையே துப்பாக்கியால் சுடப்பட்டன. யாருக்கும் காயமில்லை. மோட்டார்களுக்கும் சேதமில்லை. அப்பகுதியில் துப்பாக்கிகள் வைத்திருந்த இருவர் விசாரிக்கப் படுகிறூர்கள் என்று தகவல் இலாகாமூலம் பாதுகாப்பு இலாகாபாராளுமன்றக் காரியதரிசி வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் எல்லாக்காரியாலயங்களிலும் அமைதியாக நடைபெற்று வருவதாக அதே அறிக்கை கூறுகிறது.

---

## உபந்நியாசம்

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "மெய்ப்பொருள் நாயனர்" என்னும் விடயம்பற்றி திரு. வே. சோமசுந்தரம் உபந்நியாசம் செய்தார். கோவில் பரிபாலனசபையின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு சபைத் தலைவர் திரு. கு. வைரமுத்து தலைமை வகித்தார்.

இக்கோவிலில் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றுவருகிறது.

---

## உருளைக்கிழங்கு

கொழும்பு, செவ்வாய்

உருளைக்கிழங்குச் சாகுபடி, உத்தரவாதவிலைத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டுமென விவசாய, காணி அபிவிருத்தி மந்திரி திரு. ஸி. பி. டி. சில்வா உத்தரவிட்டிருக்கிறூர்.

---

## கியூபா தேசம் பற்றி காஸ்ட்ரோ

ஹவாஞ, ஏப்ரல் 24

கியூபாவில் ரஷ்ய விமானங்கள் போரில் உபயோகிக்கப்பட்டதாய்க் கூறப்பட்ட குற்றச்சாட்டை திரு. காஸ்ட்ரோ மறுத்தார். புரட்சிக்காரரின் 10 விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும் அவர் கூறினர். "எதிரிகளில் 82பேர் கொல்லப்பட்டனர். 450 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. எங்கள் தரப்பில் 87 பேரைக்காணேம்" என்றும் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

---

## ஜேர்மனியிலுள்ள

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஸுக்குவந்து இறங்கின. அல்ஜீரியாவிலுள்ள பல ராணுவ அணிகள் ஜெனரல் டிகாலுக்கு விசுவாசம் தெரிவித்துள்ளன. அவசியமானல் சொத்துக்களை ஆர்ஜிதம் செய்யும் அதிகாரத்தையும் ஜனதிபதி மேற்கொண்டுள்ளார்.

வாய்ப்பு கிடைத்தவுடன் பிரான்ஸுக்கு வந்து விடும்படி பிரெஞ்சு முப்படை மந்திரி அல்ஜீரியாவுக்கு விண்ணப்பித்துக் கொண்டார். அல்ஜீரியாவுக்கு சப்ளையைத்துண்டித்து, முற்றுகை நிலையை ஏற்படுத்த பிரான்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

## லாவோஸ்

லண்டன், செவ்வாய்

லாவோஸில் சண்டையை நிறுத்தும்படி லாவோஸ் சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைமை நாடுகளான பிரிட்டனும் ரஷ்யாவும் விண்ணப்பம் விடுத்துள்ளன.

லாவோஸ் சர்வதேசக் கமிஷனைக் கூட்டுமாறு ரஷ்யாவும் பிரிட்டனும் அந்த விண்ணப்பத்தில் பாரதத்தைக் கேட்டுள்ளன.

மே மாதம் 12-ந் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் பிரிட்டனும் ரஷ்யாவும் இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

லாவோஸ் நிலைமை தென் கிழக்காசியாவுக்கே பேராபத்தாக முடியுமென்று ரஷ்யாவும் பிரிட்டனும் விடுத்துள்ள அந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லாவோஸில் சண்டையை நிறுத்துவதற்கான அலுவல்களில் ஈடுபடும்படி இராணுவத் தளபதிகளை அந்த விண்ணப்பம் கேட்டுள்ளது. சண்டை நிறுத்து உடன் பாட்டுக்குவர இருதரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று அது கேட்டுள்ளது.

லாவோசுக்கு வரும் சர்வதேசக் கமிஷனுடன் பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அந்தக் கூட்டு விண்ணப்பம் கேட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்தின் பிரதிகள் லாவோஸின் பூன் ஊம் அரசாங்கத்திடம் பிரிட்டன் கையளிக்கும் சுவன்னபூமா ஆதரவாளர்களிடம் ரஷ்யா ஒப்படைக்கும்.

லாவோஸில் சண்டை நிறுத்தம் ஏற்பட்டு விட்டது உறுதியான பின்னரே, லாவோஸ் சம்பந்தமான மாநாடெதிலும் கலந்துகொள்ள முடியுமென்று அமெரிக்கா தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

மே மாதம் 12-ந் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் லாவோஸ் சர்வதேசக் கமிஷன் மகாநாட்டுக்கு கனடா, போலந்து, ஆகிய நாடுகளும் அழைக்கப்பட்டுள்ளன.

---

## வருமானவரி கட்டவேண்டும்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க ஆதரவுள்ள கூட்டுத் தாபனங்கள்யாவும் அக்டோபர் மாதம் முதல் திகதி தொடக்கம் வருமானவரி செலுத்தவேண்டும்.

---

## அல்பேனியாவுக்கு சீன உதவி

ஹொங்காங், திங்கள்

அல்பேனியாவுக்கு நவ சீன யந்திரம், தொழில் நுட்ப உதவியளிக்கும. இந்த உதவித் திட்ட ஒப்பந்தம் நேற்று பீகிங்கில் கைச்சாத்திடப்பட்டது.

---

கொழும்பு,செவ்வாய்

தேசியக் கல்விக்கமிஷனுக்கு மகஜர் சமர்ப்பிக்க விரும்புபவர்கள், அவற்றை இம் மாதம் 30ம் தேதிக்கு முன் அனுப்பவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

Leyden L.I.L

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

№ 07703